(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 108.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2011, யூலை 20, புதன்கிழமை, பி. ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0454/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிர்மாணம், பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொதுவசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கை சனாதிபதி 2010, யூன் 8 முதல் 10 வரையான காலப்பகுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த போது, தமிழ் மக்களுக்காக 50,000 வீடுகளைக் கட்டுவதற்கு 24 பில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு இந்திய அரசாங்கம் இணங்கியதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிடப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி இற்றைவரையில் கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையினையும்;

(ii) அவை கட்டப்பட்டுள்ள இடங்களையும் அவற்றைப் பெற்றுக்கொண்டவர் களின் பெயர்களையும்;

(iii) வீடுகளின் நிர்மாணத்திற்கு முன்னதாக வழங்கப்பட்ட இந்தியாவினால் வழங்கப்பட்ட பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) புதிய வீடுகளை வழங்குவதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தோரைத் தெரிவு செய்வதற்குப் பயன்படுத்தப்படும் அடிப்படையையும்;

(ii) அவர்கள் தமிழர்களா, முஸ்லிம்களா அல்லது சிங்களவர்களா என்பதையும்;

(iii) உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் அனைவரையும் குடியமர்த்துவதற்கு இன்னும் தேவைப்படுகின்ற வீடுகளின் எண்ணிக்கையையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0918/ '10

2.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சேனானிகல பிரசேத்தில் குடியமர்த்துவதற்கு தீர்மானித்துள்ள பழங்குடிக் குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(ii) இற்றைவரை குடியமர்த்தியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கையையும்;

(iii) மேற்படி குடும்பங்களுக்குச் சொந்தமான ஆட்களின் எண்ணிக்கையையும்;

(iv) ஒவ்வொரு குடும்பத்திற்கும் எவ்வளவு காணி வழங்கப்படுவதற்கு விதத்துரைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(v) இற்றைவரை இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அல்லது வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணியின் அளவு எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) பழங்குடிக் குடும்பங்களுக்காக சேனானிகல பிரதேசத்தில் வழங்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளை இவர்களுக்கு பெற்றுக்கொடுக்காமல் இருப்பதற்கான வேலைத்திட்டமெதுவும் உள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

1220/ '11

3.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக வெகுசன ஊடக, தகவல் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1366/ '11

4.

கௌரவ எம். ரி. ஹசன் அலி,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) 2007, 2008, 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில்,

(i) அம்பாறை மாவட்டத்திலுள்ள பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளின் தொகையையும்;

(ii) கல்முனையிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளர் பிரிவின் கீழ் வரும் விவசாய சேவைகள் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதிகளின் தொகையையும்

அவர் இச்சபைக்கு வெவ்வேறாக அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1422/ '11

5.

கௌரவ அஜித் குமார,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) இவ் வருடத்தில் மற்றும் எதிர்காலத்தில் காலி கோட்டையினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்திருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் யாவை என்பதையும்;

(ii) இதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை மற்றும் நிதி வழங்கும் நிறுவனங்கள் யாவையென்பதையும்

வெவ்வேறக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) காலி கோட்டையினுள் உள்ள பாடசாலைகள் அல்லது வேறு அரச நிறுவனங்களை அப்புறப்படுத்துவதற்கான திட்டம் உள்ளதா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அதற்கான காரணம் என்னவென்பதையும்;

(iii) அந்த பாடசாலைகள் அல்லது நிறுவனங்களை அப்புறப்படுத்துவதாயின், அந்த கட்டிடங்கள் தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச் சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) காலி கோட்டையினுள் உள்ள காணிகளை அல்லது கட்டிடங்களை ஏதேனும் கருத்திட்டத்துக்காக குத்தகைக்கு வழங்க அல்லது அங்குள்ள கட்டிடங்களை அப்புறப்படுத்த எதிர்பார்க்கின்றீர்களா என்பதையும்;

(ii) அவ்வாறெனின் அந்த காணிகள் அல்லது கட்டிடங்கள் யாவையென்பதையும்;

(iii) அவ்வாறு அப்புறப்படுத்துவதாக இருப்பின், அதற்கான நிபந்தனைகள் யாவையென்பதையும்;

(iv) காணிகள் அல்லது கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கி அல்லது கட்டிடங்களை அப்புறப்படுத்தி நடைமுறைப்படுத்த உத்தேசித்திருக்கும் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(v) இதற்காக காணிகளை அல்லது கட்டிடங்களை வழங்கும் நிறுவனங்கள், கம்பனிகள் அல்லது நபர்கள் யார் என்பதையும்;

(vi) இது தொடர்பாக ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0773/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010.06.29 இல் விநியோகிக்கப்பட்ட நிதி முகாமைத்துவ அறிக்கையின் பிரகாரம் கிரேலைன் இன்நெஷனல் பிரைவேட் லிமிரெற்றிற்கு ரூ.400 மில்லியனுக்கான வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி அறிக்கையின் பிரகாரம்,

(i) அவ் வங்கி உத்தரவாதம் ஏன் வழங்கப்பட்டது என்பதையும்;

(ii) பிரதி உபகாரமாக கிடைத்த நன்மைகள் என்னவென்பதையும்;

(iii) அப் பொறுப்பு எப்போது விடுவிக்கப்படும் என்பதையும்;

(iv) கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (சி.டபிள்யூ.ஈ) அரச வர்த்தக லிமிரெற் அல்லது அரச வர்த்தக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றிற்கு வழங்கப்பட்ட ரூ. 4200 மில்லியன் வங்கி உத்தரவாதம் ஏன் விடுவிக்கப்படவில்லையென்பதையும்;

(v) மேற்படி உத்தரவாதங்கள் இருப்பதனால் கிடைக்கின்ற நன்மைகள் என்னவென்பதையும்;

(vi) இலங்கை மின்சார சபையை மேலும் கடனுக்கு இட்டுச் செல்லும் இலங்கை மின்சார சபையுடன் தொடர்புடைய கருத்திட்டங்களுக்கு ரூ. 120 பில்லியன் வங்கி உத்தரவாதம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(vii) இந்நிலைமைய சீர்செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் என்னவென்பதையும்;

(viii) மக்கள் வங்கியின் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அரசாங்கத்தினால் பணம் எடுக்கப்பட்டமைக்கான காரணங்கள் என்னவென்பதையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0987/ '10

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) நேர்மையான செயல்திறன் மிக்க பொலிஸ் உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் நோக்கத்தில் 2005 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலமும் வழங்கப்பட்டுள்ள பண அன்பளிப்புத் தொகை எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நோக்கத்துடன் பண அன்பளிப்பு வழங்கும் செயற்பாடு தற்பொழுது நிறுத்தப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி ஊக்குவிப்புத் தொகை நிறுத்தப்பட்டமையினால் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊக்கமிழந்துள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) பண அன்பளிப்பு வழங்குதல் நிறுத்தப்பட்டு எவ்வளவு காலமாகின்றது என்பதையும்;

(ii) மேற்படி அன்பளிப்புத் தொகையை பெறுவதற்கு தகைமைப் பெற்றுள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு அன்பளிப்புத் தொகை வழங்கும் திட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில் ஆதற்காக எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1221/ '11

8.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— சிவில் விமானச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக சிவில் விமானச் சேவைகள் அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1367/ '11

9.

கௌரவ எம்.ரி. ஹசன் அலி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) திணைக்களத்தில் பொருத்தமான பதிலீடு இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே ஒப்பந்த அடிப்படையில் எந்தவொரு நிறைவேற்றுத் தரத்திலான அல்லது நிறைவேற்றுத் தரத்திலில்லாத ஊழியர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படும் எனக் குறிப்பிடும் 2011 ம் ஆண்டின் 2ம் இலக்கச் சுற்று நிருபத்தினை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணிப் பிரிவு அண்மையில் வெளியிட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஒரு குறிப்பிட்ட பதவிக்கு திணைக்களத்தில் பொருத்தமான நபர்கள் யாரும் இல்லை என்பதைத் தீர்மானிப்பதற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஆளணிப் பிரிவு பின்பற்றும் நடைமுறையை அவர் இச் சபைக்கு அறியத் தருவாரா?

(இ) பகுதி "ஆ" வில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றாமல் எந்தவொரு ஊழியருக்கும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனங்கள் வழங்கப்படமாட்டாது என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1423/ '11

10.

கௌரவ அஜித் குமார,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரையிலான ஒவ்வொரு வருடத்திலும் சுற்றுலா சபைக்காகச் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் அளவு யாதென்பதையும்;

(ii) இக்காணிகள் தற்போது வழங்கப்பட்டுள்ள கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) இக்காணிகளுக்காக கிடைக்கப்பெற்றுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iv) காணிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு கருத்திட்டத்திற்குமுரிய நபர்கள், கம்பனிகள் அல்லது நிறுவனங்கள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நபர்களுக்கு, கம்பனிகளுக்கு அல்லது நிறுவனங்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படை யாதென்பதையும்;

(vi) இக்காணிகளில் தற்போது உரிய கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vii) ஆமெனில் அவை யாவையென்பதையும்

அவர் தனித்தனியாகக் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0850/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை மத்திய அரசாங்கம், மாகாண சபைகள், நகரசபைகள் என்பவற்றில் வீதி நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தொகைகளை வருடவாரியாக வெவ்வேறாகவும்;

(ii) 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை அனைத்து வகையான வீதி வகைகளுக்குமென மேற்படி மூன்று அமைப்புகளுக்கும் ஏற்பட்ட மொத்தச் செலவீனத்தையும்;

(iii) 2012 ஆம் ஆண்டில் வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கென ஒதுக்கீடு செய்யப்படவுள்ள பணத்தொகையையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ) (i) இல் குறிப்பிட்ட வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பிற்கான நிதி மூலங்களையும்;

(ii) அது ஒரு கடன் மூலதனம் எனின், கடன்பெறும் செலவீனம் மற்றும் கடன்வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்களின் பெயர்களையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 2006, 2007, 2008, 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் முடிவுறுத்தப்பட்ட வீதி நிர்மாணங்களுக்கென அரசாங்கம் தனியார் ஒப்பந்தக்காரர்களுக்குச் செலுத்திய பணத்தொகையை அவர் அறிவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1000/ '10

12.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— தொழில், தொழில் உறவுகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் (E.T.F.) இதுவரை வைப்புச் செய்துள்ள பணம் எவ்வளவென்பதையும்;

(ii) இதில் அங்கத்துவம் பெற்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கையையும்;

(iii) அங்கத்தவர்களின் பணத்திற்காக வழங்கப்படுகின்ற வருடாந்த வட்டி வீதம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்பணத்தை அங்கத்தவர்களுக்கு மீளச் செலுத்தும் 5 வருட கால எல்லையானது அதைவிட நீண்ட காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளதா,

(ii) இன்றேல், அத்தகைய கால நீடிப்புக்கான திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா,

(iii) மேற்படி (i) அல்லது (ii) மேற்கொள்ளப்பட்டிருப்பின், அதற்கு ஏதுவான காரணங்கள் யாவை,

(iv) இதன்பொருட்டு தொழில் ஆலோசனை மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) குறுகியகாலத் தேவைகளை ஈடேற்றிக் கொள்வதற்காக ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பணத்தைப் பாவிக்கின்ற ஊழியர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களுக்காக வழங்கப்படும் தீர்வு யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1222/ '11

13.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— அரசாங்க முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2011 'தயட்ட கிருல' கண்காட்சிக்காக அரசாங்க முகாமைத்துவ, மறுசீரமைப்பு அமைச்சு செலவிட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அமைச்சின் ஒவ்வொரு நிறுவனம் மற்றும் திணைக்களத்தினால் மேற்படி கண்காட்சிக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு தனித் தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களினால் ஆற்றப்பட்ட பணிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு பணிக்காகவும் செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) கடந்த வரவு செலவுத் திட்டத்தில் மேற்படி செலவினத்துக்காக அமைச்சின் எந்த செலவுத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1368/ '11

14.

கௌரவ எம்.ரீ.ஹசன் அலி,— துறைமுகங்கள்,நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) ஒலுவில் துறைமுக அபிவிருத்தி நோக்கத்திற்காக PP/AM/3737ஆம் இலக்க நில அளவை வரைபின் பிரகாரம் அடையாளம் காணப்பட்டு காணிகளை சுவிகரித்தமைக்காக நட்டஈடுகள் வழங்கப்பட்ட காணி உரிமையாளர்களது பெயர்கள் என்னவென்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) AD/DS/LD/LAOH/26 ஆம் குறியீட்டு இலக்கத்தின் கீழ் PP/AM/3737ஆம் இலக்க நில அளவை வரைபின் பிரகாரம் 2ஆம் இலக்க காணித்துண்டை அடையாளம் கண்டு சுவிகரித்தமைக்காக நாவிதன்வெளி சென்றல்கேம்ப் 4/11ஆம் இலக்கத்தில் வசிக்கின்ற ஜனாப் யூசுப் லெப்பை உதுமா லெப்பை என்பவருக்கு நட்டஈடு வழங்கப்பட்டதா என்பதை அவர் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1425/ '11

15.

கௌரவ அஜித் குமார,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'நாம் பயிர் செய்வோம் – நாட்டைக் கட்டியெழுப்புவோம்' எனும் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதி என்னவென்பதையும்;

(ii) மேற்படி கருத்திட்டத்தின் மூலம் நிறைவேற்றுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்ட நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நோக்கங்கள் நிறைவேற்றியுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி கருத்திட்டத்துக்காக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(ii) ஒதுக்கப்பட்ட தொகையில் செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்துக்கும் செலவிடப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(v) மேற்படி கருத்திட்டத்தின் பிரச்சாரத்திற்காகவும் விழாக்களுக்காகவும் ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்

வருடாந்த ரீதியாக தனித் தனியாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 'நாம் பயிர் செய்வோம் – நாட்டைக் கட்டியெழுப்புவோம்' கருத்திட்டம் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன் ?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 5 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளிலிருந்து விலக்குப்பெறுமாக

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 2011 ஆம் ஆண்டின் வரவு செலவு பிரேரணையினைப் பின்பற்றி, 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011 மார்ச்சு மாதம் 23 ஆந் திகதிய 1698/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 2.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.1),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2011 ஏப்பிறல் மாதம் 07 ஆந் திகதிய 1700/19 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 3.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.2),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 61 ஆம் பிரிவின் (1) ஆம் உபபிரிவின் (இ) மற்றும் (ஊ) ஆம் பந்திகளின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 05 ஆந் திகதிய 1600/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 4.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள் (இல.3),— 1996 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க கடற்றொழில், நீரியல் வளங்கள் சட்டத்தின் 30ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 61 ஆம் பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2010 ஓகத்து மாதம் 04 ஆந் திகதிய 1665/16 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 5.

கடற்றொழில், நீரக வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்,— அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு, 1964 ஒற்றோபர் 1 ஆம் திகதிய 14186 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் (V) ஆம் பகுதியை திருத்தஞ் செய்து அச்சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் கடற்றொழில் நீரியல் வளமூலங்கள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 யூன் மாதம் 30 ஆம் திகதிய 1712/21 ஆம் இலக்க விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.07.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 6.

உள்ளூர் அதிகாரசபைகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — குழு

* 7.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — குழு

* 8.

ஊழியர் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 9.

கடல்கடந்த ஊழியர்கள் ஓய்வூதிய நன்மைகள் நிதியச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 10.

ஓய்வூதியங்கள் (விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 11.

ஊழியர் சகாய நிதியம் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 12.

நிதித்தொழில் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 13.

சுகாதார அமைச்சர்,— இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.06.11ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான இலங்கை அரச மருந்தகக் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 14.

சுகாதார அமைச்சர்,— ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் 2008,— 1957 ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரசாங்க சட்டபூர்வமான தொழிநுட்பக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 30(2)ஆம் மற்றும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3)ஆம் பிரிவுகளின் கீழ், 2010.09.23 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும் 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் வருடத்தின் பொருட்டு தயாரிக்கப்பட்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புக்குட்படுத்தப்பட்டதுமான ஸ்ரீ ஜயவர்தனபுர பொது ஆஸ்பத்திரியின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(சுகாதாரம் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 15.

தொழிநுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சர்,— இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை 2008,— 1994ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க விஞ்ஞான தொழிநுட்ப அபிவிருத்திச் சட்டத்தின் 40(3) ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான இலங்கை கைத்தொழில் தொழிநுட்ப நிறுவகத்தின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(விஞ்ஞான, தொழிநுட்பவியல் பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 16.

மின்வலு, சக்தி அமைச்சர்,— அணுசக்தி அதிகாரசபையின் வருடாந்த அறிக்கை 2008,— 1969ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க, அணுசக்தி அதிகாரசபைச் சட்டத்தின் 34ஆம் பிரிவிற்கமையவும் 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(3) ஆம் பிரிவிற்கமையவும் 2010.06.30 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதும், 2008.12.31ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அவதானிப்புகளுடனான அணுசக்தி அதிகார சபையின் வருடாந்த அறிக்கை அங்கீகரிக்கப்படுமாக.

(மின்வலு, சக்தி பற்றிய ஆலோசனைக் குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டது.)

* 17.

பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர்,— இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தில் 5 (ஆ) மற்றும் 5 (இ) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தில் 25 ஆம் பிரிவின் கீழ் இலங்கைத் தேயிலைச் சபையினால் ஆக்கப்பட்டு, பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டு, 2010, ஒற்றோபர் மாதம் 27 ஆம் திகதிய 1677/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும், 2011.01.04 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 18.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்கு விதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 19.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சரினால் சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் அனுமதி பெற்ற ஹோட்டல்களுக்குள் மதுபானம் பரிமாறுவது தொடர்பில் விதிக்கப்பட்டு, 2011, சனவரி மாதம் 21 ஆம் திகதிய 1689/20 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.02.10ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(மதுவரி அறிவித்தல் இலக்கம் 935.)

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

20.

அநுராதபுரம் ஸ்ரீ புஷ்பதான அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

21.

பஹலகம சிறீ சோமரத்தன நாயக்க தேரர் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

22.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

23.

இராமகிருஷ்ண சாரதா மிஷன் (இலங்கைக் கிளை) (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.